# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

# 1967-ம்
# ஆண்டுக்கான அறிக்கை
# பகுதி II


பதிப்பாசிரியர்கள்

இ. எம். செனறி, பீ.எஸ்சி, பீஎச்.டி. (லண்), ஏ.ஆர்.சி.எஸ், டி.ஐ.சி.

ஆர். எல். டி சில்வா, பீ.எஸ்சி (இலங்), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி.

மொழிபெயர்ப்பு: எஸ். கிருஷ்ணபிள்ளை, பீ.எஸ்சி. (இலங்)



பிரசுரம்

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

சென்ற் கூம்ஸ், தலவாக்கொல்லை, இலங்கை

**1968**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சபை | 3 |
| பணியாளர் | 4 |
| ~~அதிபர் அறிக்கை~~ | ~~10~~ |

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

சபை

(1967, டிசெம்பர் 31 ம் தேதியன்று)

---

தலைவர் — திரு எப். அமரசூரியா

**பதவிவழி அங்கத்தவர்கள்**

கமத்தொழில் அதிபர்:
திரு எம். எஸ். பெரேரா

கௌரவ நிதி அமைச்சரின் பிரதிநிதி:
திரு ஜி. டி. லோஸ்

தலைவர், இலங்கை தோட்டத் துரைமார்கள் சங்கம்:
திரு பி. வரசுவிதானே

தலைவர், இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்தாபனம்:
திரு ஜி. ஐ. டி. கிலன்வில்

தலைவர், இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கம்:
திரு ரி. சி. ஏ. டி. சொய்சா

தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரி:
திரு சி. பி. சண்முகம்

அதிபர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்:
கலாநிதி இ. எம். செனறி

**நியமன அங்கத்தவர்கள்**

இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள்

திரு எஸ். பி. வைத்திலிங்கம்
திரு ஜி. பி. மிடில்டன்
திரு ஏ. பி. பிங்கர்

இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்தாபனத்தால் நியமிக்கப்பட்டவர்கள்:

திரு பி. ஜே. சி. டறன்ற்
திரு ரி. ஏ. மோய்
திரு எம். பி. ஹோஸ்பல்

இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள்:

திரு எப். அமரசூரியா
திரு எஸ். பத்மநாதன்
திரு ஜே. எல். டி. பீரிஸ்

கௌரவ கமத்தொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட சிறுதோட்டச் சொந்தக்காரரின் பிரதிநிதிகள்:

திரு டி. இ. ஹெற்றியாராச்சி
திரு எம். இராஜேந்திரம், எம்பிஇ

கௌரவ கமத்தொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் சபைப் பிரதிநிதி:

திரு டி. ஜே. றனவீரா, எம்.பி.

செயலாளர் — திரு ஏ. சி. பெரேரா

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

## பணியாளர்

(1967, டிசெம்பர் 31-ம் தேதியன்று)

### இயக்குநர் குழு

| | |
|---|---|
| அதிபர் | இ. எம். செனறி, பீ.எஸ்சி, பீஎச்.டி. (லண்), ஏ.ஆர்.சி.எஸ், டி.ஐ.சி. |
| பிரதி அதிபர் | ஜே. ஏ. எச். ரொலஸ்ற், பீ.எஸ்சி. (ரீடிங்) |
| உதவி அதிபர் | எல். எச். பெர்னன்டோ, பீ.எஸ்சி., பீஎச்.டி. (லண்) |

### ஆராய்ச்சிப் பகுதிகள்

**கமத்தொழில் இரசாயனவியல்**

| | |
|---|---|
| ஆலோசகர் | ஜே. ஏ. எச். ரொலஸ்ற், பீ.எஸ்சி. (ரீடிங்) |
| கமத்தொழில் இரசாயனவறிஞன் | வி. பி. பவானந்தன், பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (எடின்), ஏ.ஆர்.சி.எஸ். |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | டபிள்யு. எம். டபிள்யு. பி. மணிப்புரு, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி (கன்ராப்) |
| ஆராய்ச்சி உதவியாளர் | எஸ். சந்தனம், பீ.எஸ்சி. (இல)<br>*எஸ். சிவசுப்பிரமணியம், பீ.எஸ்சி. (இல) |
| நுண்தொழில் உதவியாளர் | வி. பெர்னன்டோ<br>எஸ். ஜி. ஜெயசூரியா<br>ரி. சி. சற். ஜேமன்<br>ரி. குலரட்ண, பீ.எஸ்சி. (இல)<br>சி. சி. இராசசிங்கம்<br>எம். சிக்குராஜபதி, பீ.எஸ்சி. (இல)<br>ஏ. சோமரட்ண, பீ.எஸ்சி. (இல)<br>எஸ். சுந்தரலிங்கம், பீ.எஸ்சி. (பூண) |

**உயிரினவிரசாயனம்**

| | |
|---|---|
| உயிரினவிரசாயனவறிஞன் | ஆர். எல். விக்கிரமசிங்கா, பீ.எஸ்சி. (இல), பீ.எஸ்சி. (லண்), பீஎச்.டி. (செவ்), எப்.ஆர்.ஐ.சி. |
| உயிரினவிரசாயனவறிஞன் (சுவை ஆராய்ச்சி) | ஏ. எஸ். எல். திருமான, பீ.எஸ்சி., பீஎச்.டி. (லண்) |
| ஆராய்ச்சி உதவியாளர் | *ஜி. ஆர். ரேபட்ஸ், பீ.எஸ்சி. (இல)<br>*ஆர். ஆர். செல்வேந்திரன், பீ.எஸ்சி. (இல) |

---

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

| | |
|---|---|
| நுண்தொழில் உதவியாளர் | யு. எல். எல். டி சில்வா, பீ.எஸ்சி. (இல)<br>பி. பி. எம். பெரேரா<br>கே. பி. டபிள்யு. சி. பெரேரா பீ.எஸ்சி. (இல)<br>*கே. சிவபாலன், பீ.எஸ்சி. (இல) |

## சிற்றுயிரியல்

| | |
|---|---|
| சிற்றுயிரறிஞன் | டபிள்யு. நந்தநாராயன, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. |
| ஆராய்ச்சி உதவியாளர் | டி. ஜே. டபிள்யு. றனவீரா |
| நுண்தொழில் உதவியாளர் | எஸ். என். பெர்ணன்டோ, பீ.எஸ்சி. (இல)<br>எச். பி. ஹேறத், பீ.ஏஜி.எஸ்சி. (மஸ்சே, நியூசி)<br>ஏ. கதிரவேற்பிள்ளை, பீ.எஸ்சி. (இல)<br>சி. சண்முகம் |

## தாவரநோயியலும் நெமற்றோடியலும்

| | |
|---|---|
| தாவர நோயியலறிஞன் | *என். சண்முகநாதன், பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்) |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | ஆர். எல். டி சில்வா, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. |
| நெமற்றோடியலறிஞன் | பி. சிவபாலன், பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (றற்கர்ஸ்) |
| நுண்தொழில் உதவியாளர் | *பி. வி. அருள்பிரகாசம், பீ.எஸ்சி. (மதராஸ்)<br>எஸ். ஆர். ஏ. பெர்ணன்டோ, பீ.எஸ்சி. (இல)<br>ஏ. ஆர். எம். ஹசிம்<br>பி. ஏ. ஜோன்<br>ரி. மணிவாசகர்<br>எஸ். முருகையா<br>டபிள்யு. ஆர். எப். றொட்றிகோ, பீ.எஸ்சி. (இல)<br>எஸ். சமரஜீவா<br>ரி. வி. சரவணபவன், பீ.எஸ்சி. (இல) |

## தாவர உடற்றொழிலியல்

| | |
|---|---|
| தாவர உடற்றொழிலறிஞன் | யு. பெத்தியாகொட, பீ.எஸ்சி. (இல) பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | வி. எஸ். குலசேகரம், பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), எம்.ஐ. பயோல். |
| ஆராய்ச்சி உதவியாளர் | *எஸ். கந்தையா, பீ.எஸ்சி. (இல)<br>*எஸ். நாகராசா, பீ.எஸ்சி. (இல), எம்.எஸ். (கலிபோ)<br>*ஏ. ஆர். செபஸ்ரியாம்பிள்ளை, பீ.எஸ்சி. (இல) |

---

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

| | |
|---|---|
| நுண்தொழில் உதவியாளர் | ஏ. எஸ். பி. கோமஸ், பீ.எஸ்சி. (இல)<br>டி. ஜானகிரும், பீ.எஸ்சி. (மதராஸ்), எம். எஸ்சி. (இ. க. ஆ. நி., புது டெல்லி)<br>எஸ். கிருஷ்ணபிள்ளை, பீ.எஸ்சி. (இல)<br>ஏ. நானயக்கார, பீ.எஸ்சி. (இல)<br>எச். ஆர். சொலமன்<br>எச். பி. விஜயதுங்கா<br>எஸ். விமலதர்மா |

__புள்ளிவிவரவியல்__

| | |
|---|---|
| புள்ளிவிவரவியலறிஞன் | பி. கணபதிப்பிள்ளை, பீ.எஸ்சி. (லண்), எப்.எஸ்.எஸ். |
| நுண்தொழில் உதவியாளர் | கே. சிவரத்தினம் |

__தொழின்முறையியல்__

| | |
|---|---|
| தொழின்முறையியலறிஞன் | டி. கீர்த்திசிங்கா, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. இ.இஞ். ஏ.எம்.ஐ. இ.இஞ். |
| தேயிலை சுவையாய்வோன் | சி. எச். விக்கிரமசிங்கா |
| அபிவிருத்தி இஞ்சினியர் | டபிள்யு. ஜோசப், பீ.எஸ்சி. இஞ். (இல) |
| ஆராய்ச்சி உதவியாளர் | என். எம். அப்டுல் கபார், பீ.எஸ்சி. (இல)<br>*டபிள்யு. சி. ஏ. டி. சில்வா, பீ.எஸ்சி. (இல) |
| நுண்தொழில் உதவியாளர் | டபிள்யு. ஏ. சி. டி. சில்வா<br>எஸ். சமரசிங்கம்<br>ஏ. தேவதாசன், பீ.எஸ்சி. (இல). |

## __வெளியூர் சேவைகள்__

__கீழ்ப்பிரதேச சேவை__

| | |
|---|---|
| உதவி அதிபர் | எல். எச். பெர்னுன்டோ, பீ.எஸ்சி., பீஎச்.டி. (லண்) |

__கீழ்ப்பிரதேச நிலையம், இரத்தினபுரி__

| | |
|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | டி. ரி. வெத்தசிங்கா, பீ.எஸ்சி., பீஎச்.டி. (றீடிங்) |
| மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தர் | *ஜே. வி. சபாநாயகம், பீ.எஸ்.ஏ., (தொறன்தோ) |
| நுண்தொழில் உதவியாளர் | இ. ஜெ. பி. டி. சில்வா, பீ.எஸ்சி. (இல)<br>சி. கந்தப்பா, பீ.எஸ்சி. (இல)<br>ஏ. ஏ. சி. கருணரற்ண, பீ.எஸ்சி. (இல)<br>டி. டி. குரூன் |

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

| | |
|---|---|
| | என். எஸ். இராஜேந்திரம், பீ.எஸ்சி. (மதராஸ்) |
| | *ரி. எப். சால்டின், பீ.எஸ்சி. (இல). |
| | எச். எச். சமரக்கோன் |
| | யு. பி. டி. எஸ். வைத்தியநாத, எம்.எஸ்சி. (இல) |
| | என். யோகரத்தினம், பீ.எஸ்சி. (அலகபாட்) |
| பரிபாலன உத்தியோகத்தர் | சி. கீர்த்திரத்ன, எப்.சி.சி. எஸ். |
| பிரதான எழுதுவினைஞர் | ஆர். ஐ. பெரேரா |
| சுருக்குத் தட்டெழுத்தாளர் | எஸ். கே. பி. தம்பிமுத்து |
| கணக்கு எழுதுவினைஞர் | கே. டி. பி. எச். அபயகுணவர்த்தன |
| மின்சாரத் தொழிலாளர் | பி. ரி. றனசிங்கா |
| வேலைத்தல எழுதுவினைஞர் | ரி. டி. வி. கூறே |

## கொட்டாவ உபநிலையம், தல்கம்பொல

| | |
|---|---|
| பொறுப்பு உத்தியோகத்தர் | கே. எச். ஜி. குணபாலா |
| நுண்தொழில் உதவியாளர் | எச். டி. ஜெயசிங்க |

## டெனியாய

| | |
|---|---|
| நுண்தொழில் உதவியாளர் | ஜே. ஐ. எச். பண்டாரநாயக்கா |

## மத்தியபிரதேச சேவை

| | |
|---|---|
| மத்தியபிரதேச விஞ்ஞான உத்தியோகத்தர் | டி. கல்நைடோ, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்) |
| மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தர் | எம். கே. வைத்திலிங்கம் |
| நுண்தொழில் உதவியாளர் | ரி. ஏ. முனசிங்க |
| | எச். பி. இரத்தினயக்கா |
| | கே. திருஞானசுந்தரம், பீ.எஸ்சி. (இல) |

## ஊவா சேவை

| | |
|---|---|
| பதில் பிரதான ஆலோசனை உத்தியோகத்தர் | எல். எம். டி. டபிள்யு. திலகரத்ன, பீ.எஸ்சி. (இல), எம்.எடி. (கலிபோனியா) |
| நுண்தொழில் உதவியாளர் | என். எம். அபயசிங்கா |
| | என். எல். சி. பெர்னன்டோ, பீ.எஸ்சி. (இல) |
| | எம். ரி. சுப்பிரமணியம், பீ.எஸ்சி. (இல) |
| கணக்கு எழுதுவினைஞர் | ரி. ஆர். பி. சலி |
| எழுதுவினைஞர் | ஏ. சி. பெரேரா |

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

## ஆலோசனைச் சேவை

| | |
|---|---|
| பதில் பிரதான ஆலோசனை உத்தியோகத்தர் | எல். எம். டி. டபிள்யு. திலகரத்ன, பீ.எஸ்சி. (இல), எம்.எடி. (கலிபோனியா) |
| ஆராய்ச்சி உதவியாளர் | ஆர். கே. நத்தானியல், பீ.எஸ்சி. (பூனு) |
| மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தர் | |
| கீழ்ப்பிரதேசம் | *ஜே. வி. சபாநாயகம், பீ.எஸ்.ஏ. (தொறன்தோ) |
| மத்திய பிரதேசம் | எம். கே. வைத்திலிங்கம் |
| நிழற்படம் பிடிப்போர் | டி. ஜே. எம். ஹெற்றியாராச்சி |

## நூல்நிலையமும் வெளியீடுகளும்

| | |
|---|---|
| வெளியீட்டுப் பதிப்பாசிரியர் | இ. எம். செனறி, பீ.எஸ்சி., பீஎச்.டி (லண்), ஏ.ஆர்.சி.எஸ், டி.ஐ.சி. |
| | ஆர். எல். டி சில்வா, பீ.எஸ்சி. (இல), பீஎச்.டி. (லண்), டி.ஐ.சி. |
| நூல்நிலையப் பொறுப்பாளர் | டி. ஜே. எஸ். டி சில்வா, பீ.எஸ்சி. (பஞ்ஜப்) |

## தோட்டங்கள்

### சென்ற் கூம்ஸ்

| | |
|---|---|
| கமத்தொழிலறிஞன் | எல். ஏ. சீவரத்தினம், பீ.எஸ்சி. (டன்லம்) |
| தலைமை தொழிற்சாலை உத்தியோகத்தர் | வீ. ஏ. பெர்ஞன்டஸ் |
| பதில் தலைமை எழுதுவினைஞர் | எச். என். டி சில்வா |
| அப்போதிக்கரி | எஸ். பி. டி சில்வா |
| வெளிக்கரும உத்தியோகத்தர் | டபிள்யு. அரியபாலா |

### சென்ற் ஜோக்கிம்

| | |
|---|---|
| தோட்டத்துரை | ஜி. எஸ். முத்தெத்துவெகம |
| தலைமை தொழிற்சாலை உத்தியோகத்தர் | எம். எஸ். டபிள்யு. விஜயரற்ன |
| தலைமை ஏழுதுவினைஞர் | ஜி. எல். ஏ. தோமஸ் |
| வெளிக்கரும உத்தியோகத்தர் | டி. டி. பத்திநாயக்க |

## பரிபாலனம்

| | |
|---|---|
| பிரதான பரிபாலன உத்தியோகத்தர் | ஏ. சி. பெரேரா |
| கணக்காளர் | எச். எஸ். குணவர்த்தன, பீ.ஏ. (இல) |
| அதிபரின் செயலாளர் | ஜி. ஏ. எஸ். குணசிங்கா |
| மொழிபெயர்ப்பாளர்–போதனாசிரியர் | சி. எம். பெர்ஞன்டோ, பீ.ஏ. (இல) |

*வெளிநாட்டில் பயிற்சிபெறுவோர்

## கணக்குப் பிரிவு

| | |
|---|---|
| கணக்கு உதவியாளர் | ஏ. எச். பி. டயஸ் |
| பதில் பிரதான எழுது வினைஞர் | டபிள்யு. ஜே. சாமுவல் |
| பதில் சிரேட்ட கணக்கு எழுதுவினைஞர் | எம். பி. பாலிஸ் |
| உள்ளகக் கணக்குப் பரி சோதனை உத்தியோகத்தர் | ஐ. றெங்கராஜ் |
| கணக்கு எழுதுவினைஞர் | எச். அத்தநாயக்க<br>ஜி. ஏ. கே. பி. டி சில்வா<br>கே. பி. குணவர்த்தன<br>என். எம். ஜெயத்திலகா<br>எஸ். குலசபாநாதன்<br>என். சச்சிதானந்தன்<br>யு. சி. உனம்புவ<br>சி. பி. வருவிற்ற<br>டி. டபிள்யு. விக்கிரமரற்ன<br>எச். சி. விக்கிரமசிங்கா |

## தட்டச்சுப் பிரிவு

| | |
|---|---|
| சுருக்குத் தட்டெழுத்தாளர் | இ. சி. சி. புரோகியர்<br>எஸ். ஏ. எல். எச். பெர்னன்டோ<br>ரி. ஜே. ஹலால்டீன்<br>பி. பி. ஜோன்ஸ்<br>பி. டபிள்யு. உடுவாவல<br>எஸ். டி. ஜே. ஜே. விதானபத்திரன |
| தட்டச்சு எழுதுவினைஞர் | ஜே. என். அப்பசிங்க<br>டி. டபிள்யு. பதலோமியஸ்<br>சி. வி. ஆர். டி. பொன்சேகா<br>வி. கோதாகொட<br>எஸ். பி. வெத்தாவ |
| பதிவு எழுதுவினைஞர் | கே. எல். டி அல்விஸ் |
| தபாற் எழுதுவினைஞர் | எச். டபிள்யு. பெரேரா |

## வேலைப் பிரிவு

| | |
|---|---|
| மின்சார முகாரி | டபிள்யு. ஆர். சொலமன் |
| வேலைத்தல எழுதுவினைஞர் | ஆர். ஏ. டானியல் |
| பண்டசாலைப் பொறுப்பாளர் | ஐ. பி. திசநாயக்க |
| இயந்திரத் தொழிலாளர் | டி. ஏ. எஸ். ஒபாதா<br>கே. எஸ். வடிவேலு |
| மின்சாரத் தொழிலாளர் | கே. ஏ. போவி |
| எழுதுவினைஞர் (வேலைத்தலம்) | கே. எச். ரி. தசநயக்கா |

# அதிபர் அறிக்கை

இ. எம். செனறி, பீ.எஸ்சி, பீஎச்.டி, ஏ.ஆர்.சி.எஸ், டி.ஐ.சி.

## பொது

ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபத்து ஏழாம் ஆண்டு, இலங்கை வர்த்தகத் தேயிலையின் நூற்றுண்டு விழாவையொட்டி தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் மாநாடு ஒன்று கொண்டாடப்பட்டது. இம் மாநாடு, இலங்கைப் பிரதமர் மாண்புமிக்க டட்லி எஸ். செனநாயக்கா அவர்களால் றதலைச் சங்கத்தில் திறந்து வைக்கப்பட்டது. நான்கு நாட் காலைநேரங்களில் விரிவுரைகள் நடைபெற்றன; பின்னேரங்களில் சென்ற் கூம்சிலுள்ள வெளிமண்டலமும் தொழிற்சாலையும் பார்வையிடப் பட்டன. பிரதான மாநாடு நடைபெற்ற சில நாட்களின் பின்னர், கீழ்ப்பிரதேசத்திலுள்ள தோட்டத்துரைமார்கள் சென்ற் ஜோக்கிமில், மூன்று நாட்கள்வரை நடைபெற்ற வெளிமண்டலப் பரிசோதிப்பில் கலந்துகொண்டனர். ஆகஸ்டு மாத முற்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற தேயிலை நூற்றுண்டுப் பொருட்காட்சி மூலமும் இந் நிலையத்தின் வேலைகள் வெளிப்படுத்தப்பட்டன.

இந்நிலையத்தின் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கும் எல்லா ஆராய்ச்சித் துறைகளிலும் அதிக முன்னேற்றம் செய்யப்பட்டன. இவர்களின் மிக முக்கியமான முடிவுகளின் சுருக்கம் பிரிவுத் தலைப்புகளுக்குக் கீழ் காணப்படும் ஆராய்ச்சிப் பொழிப்புரையில் தரப்பட்டுள.

## பணியாளர்

அதிபர் மே மாதம் 10 ம் திகதி தொடக்கம் ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிவரை நெட்டோய்விலும், கடமை விடுதலையிலும் வெளிநாடு சென்றிருந்தார். இந் நேரத்தில் திரு ஜே. ஏ. எச். ரொலஸ்ற் அவர்கள் பதில் அதிபராகக் கடமையாற்றினுர். திரு சி. பி. பொஸ்ரர்–பாஹம் அவர்கள் இந் நிலையத்தில் சுமார் ஏழு வருட காலம் சேவை செய்த பின்னர், ஜூன் 8-ம் திகதியிலிருந்து தமது பிரதான ஆலோசனை உத்தியோகத்தர் பதவியிலிருந்து விலகினுர். கலாநிதி வி. பி. பவானந்தன் அவர்கள் கமத்தொழில் இரசாயனவறிஞுகை நவம்பர் 2-ம் தேதியிலிருந்து நியமனம் செய்யப்பட்டார். திரு ஜே. ஏ. எச். ரொலஸ்ற் அவர்கள் இதே தேதியிலிருந்து கமத்தொழில் இரசாயனவியல், பயிராக்கவியல் ஆகிய பிரிவுகளின் ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டார்.

திரு எல். எம். டி டபிள்யு திலகரத்ன அவர்கள் ஜனவரி 1 ம் தேதியிலிருந்து, சிரேட்ட பிரிவில் ஊவா விஞ்ஞான உத்தியோகத்தராகவும், ஜூன் 8 ம் தேதியிலிருந்து பதில் பிரதான ஆலோசனை உத்தியோகத்தராகவும் நியமனம் செய்யப்பட்டார். திரு எச். எஸ். குணவர்த்தன அவர்கள் ஆகஸ்டு 5 ம் தேதியிலிருந்து கணக்காளராக, சிரேட்ட பிரிவில் நியமனம் செய்யப்பட்டார்.

திரு என். எம். அப்துல் கவார் அவர்கள் தொழின்முறையியற் பிரிவில் ஆராய்ச்சி உதவியாளராக ஏப்ரல் 16 ம் தேதியிலிருந்து நியமனம் செய்யப்பட்டார்; திரு சி. கீர்த்திரத்ன அவர்கள், சென்ற் ஜோக்கிமிலிருக்கும் கீழ்ப்பிரதேச நிலையத்தின் பரிபாலன உத்தியோகத்தராக ஏப்ரல் 25 ம் தேதியிலிருந்து நியமனம் செய்யப்பட்டார்.

கலாநிதி என். சண்முகநாதன், அவர்கள், ஓர் பகிரங்கப் போட்டியில், பொதுநலவரசுப் புலமைப்பரிசில் ஒன்றைப் பெற்று, கனடாவிலுள்ள பிறிற்றிஸ் கொலம்பியா என்னும் இடத்துக்கு ஆகஸ்டு மாதம் 30 ம் தேதி புறப்பட்டார். திருவாளர்கள் ரி. எப். சால்டின், பி. வி. அருள்பிரகாசம் ஆகியோருக்கு கொழும்புத்திட்ட புலமைப்பரிசில்கள்

வழங்கப்பட்டன; முன்னயவர் கனடாவில் மொன்றீல் என்னும் இடத்திலுள்ள மக்கில் பல்கலைக்கழகத்துக்கும், பின்னயவர், இங்கிலாந்திலுள்ள லண்டன் பல்கலைக்கழகமாகிய வைக் காலேச்சுக்கும் சென்றுள்ளனர்.

திரு டபிள்யு. எம். டபிள்யு. பி. மணிப்புரு அவர்கள் கேம்பிரிச்சிலிருந்து தமது பீஎச்.டி. பட்டத்தை முடித்து மே மாதம் 24 ம் தேதி திரும்பினர். திரு டபிள்யு. ஜோசப் அவர்கள் ஐக்கிய இராச்சியத்தில் பல்வேறு வேலைகளைக் கற்று தமது ஏ எம் ஐ மெக் இ. பட்டத்துடன் திரும்பினர். திருவாளர்கள் ரீ. சி. சற். ஜேமன், டி. ஜானகிரும் ஆகியோர் முறையே அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய இடங்களிலிருந்து திரும்பியுள்ளனர்.

கலாநிதிகள் ஆர். எல். விக்கிரமசிங்கா, ஏ. எஸ். எல். திருமான ஆகியோர் ஆகஸ்டு மாதத்தின்போது, யப்பான் நாட்டிலுள்ள ரோக்கியோ என்னும் இடத்தில் நடைபெற்ற 7 வது உயிரினவிரசாயன சருவதேச காங்கிரஸ் மாநாட்டில் பத்திரம் வாசித்தனர். கலாநிதி டி. கீர்த்திசிங்கா அவர்கள் ஜூன் 10 ம் தேதி தொடக்கம் 18 ம் தேதிவரை மொஸ்கோவில் நடைபெற்ற சருவதேச ஸ்ரான்டட்ச் நிறுவகக் கூட்டத்தில் கலந்து கொண்டார். கலாநிதி எல். எச். பெர்ஞன்டோ அவர்கள், நவம்பர் மாதத்தில் நடைபெற்ற 23 வது ரொக்கிலய் மாநாட்டில் கலந்து கொண்டார். கலாநிதி டி. கால்நாயிடு, திரு எல். எம். டி. டபிள்யு திலகரத்ன ஆகியோர் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற, தென் இந்திய ஐக்கிய தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் 14 வது, வருடாந்த விஞ்ஞான மாநாட்டில் கலந்துகொண்டனர்.

# ஆராய்ச்சி

## கமத்தொழில் இரசாயனவியல்

அதிகமான செயற்கையுரப் பரிசோதனைகள் தற்போது நிரந்தரமான விளைச்சலைத் தர ஆரம்பித்துள்ளன. புதிதாக நாட்டப்பட்ட தேயிலைக்கு ஆரம்ப வருடங்களில் போதுமானளவு செயற்கையுரமிடுதலால் அதிக பலன் ஏற்படுவதாகக் காணப்பட்டது. ஓரளவு குறுகிய எல்லைக்குள் வெவ்வேறு இடங்களில் செய்து நடாத்தப்படும் செயற்கையுரப் பரிசோதனையில் வெவ்வேறு விளைச்சல் கிடைப்பதாகக் காணப்பட்டது. எனவே இதில் விரிவான பரிசோதனைகளும், மண்டன்மை சோதிப்பும் செய்து ஆலோசனைகள் செய்யப்படவேண்டுமென்பதை இது வலியுறுத்துகின்றது.

மலைப்பிரதேச நாற்றுத் தேயிலையில், ஒரு வருடத்தில் இரு முறைகள் செயற்கையுரமிடுதலால் ஏற்படும் விளைச்சல், இதேயளவு செயற்கையுரம் நாலாகப் பிரித்து இடப்படும்போது ஏற்படும் விளைச்சலுக்குச் சமானமாக இருந்தது. அத்துடன், உரம் இரு வரிசைகளிலும் இடப்படுவதற்குப் பதிலாக ஒன்றுவிட்ட வரிசைகளில் இடப்படுவது போதுமானது எனக் காணப்பட்டது. செயற்கையுர அளவுத் திட்டங்கள், குறைந்தளவு யூரியாவை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் நிலையில் இவ்விரு கண்டுபிடிப்புகளும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருக்கலாம்.

மூன்று பிரதான நைதரச செயற்கையுர வகைகளுக்கிடையில் இதுவரை மிகக் குறைவான வித்தியாசமே காணப்பட்டது. யூரியாவை ஏனைய செயற்கையுரங்களுடன் கலந்து சேமித்து வைப்பது பற்றியும், இவற்றை கையாளும் முறைபற்றியும் செய்யப்பட்ட பரிசோதனைகள் உகந்த முடிவுகளைத் தந்துள்ளன.

## பயிராக்கவியல் (கீழ்ப்பிரதேசம்)

இரத்தினபுரியிலிருக்கும் கீழ்ப்பிரதேச நிலையம், கொட்டாவ உப நிலையம், மற்றும் இரத்தினபுரி, டெனியாய, காலி, களுத்துறை, களனிப் பள்ளத்தாக்கு ஆகிய மாவட்டங்களிலுள்ள தோட்டங்களில் 80க்கு மேலான பரிசோதனைகள் நடாத்தப்பட்டன,இளம் தேயிலையைப் பொறுத்தவரையில் நைதரசன், பொசுபேற்று, பொற்ருசு ஆகியவற்றுக்கு விளைச்சல் கூடுதலாக இருந்தது; ஆனல் பயிரிடப்பட்டதிலிருந்து நான்கு வருடங்களுக்கு மேலான தேயிலையில் நைதரசனுக்கு மட்டுமே கூடுதலான விளைச்சல் காணப்பட்டது. இப் பரிசோதனைகளின் கண்டுபிடிப்புகளை ஆதாரமாகக்கொண்டு பொசுபேற்று, பொற்ருசு ஆகியவற்றின் அளவுகள் குறைக்கப்படல் வேண்டுமென தோட்டங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது. முதிர்ந்த நாற்றுத் தேயிலைக்கு, வருடம் ஒரு ஏக்கருக்கு 80 இரு. தொடக்கம் 120 இரு. நைதரசன் வரையும், பதி ( VP ) தேயிலைக்கு வருடம் ஒரு ஏக்கருக்கு 240 இரு. தொடக்கம் 320 இரு. நைதரசன் வரையும் இடப்படுவதால் சிறந்த விளைச்சல் உண்டாவதாகக் காணப்பட்டது. சிங்குச் சல்பேற்று இடப்படுவதால் விளைச்சல் கூடுவதாகக் காணப்பட்டது. வருடம் ஒரு ஏக்கருக்கு 15–20 இரு. சிங்குச்–சல்பேற்ருகவும், ஒரு வருடத்தில் இது நான்கு அல்லது ஐந்து முறைகளில் பிரித்து இடப்படுதல் வேண்டுமெனவும் ஆலோசனை செய்யப்பட்டது. அமோனியஞ் சல்பேற்று, யூரியா, கல்சியம் அமோனியம் நைத்திரேற்று ஆகியவற்றுக்கிடையே விளைச்சலில் குறிப்பிடத்தக்க வித்தியாசமில்லை எனக் காணப்பட்டது. ஆனல் குணுவெல போன்ற சில தோட்டங்களில் கல்சியம் அமோனியம் நைத்திரேற்று சிறந்ததெனக் காணப்பட்டது. மண் திரும்பச் சீர்ப்படுத்தல் பற்றி ஆராய சென்ற் ஜோக்கிமில் பல பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. பரிசோதனைப் பாத்திகளிலிருந்து கிடைத்த முடிவுகளின்படி, மறுசீர்ப்பாடு செய்யப்படாத தேயிலை நிலத்தில் தேயிலையை வெற்றிகரமாக திரும்பப் பயிர் செய்ய முடியுமெனக் காணப்பட்டது. ஆனல் இது அதிகம் அரிக்கப்படாத மண்ணுக இருத்தல் வேண்டும். முளைவகைச் சோதனைகளில், தேஆநி 2023, தேஆநி 2026 ஆகியவை ஏனைய முளைவகைகளை விடச் சிறந்தவை எனக் காணப்பட்டது. சென்ற் ஜோக்கிம், கொட்டாவ, ஆகிய இடங்களில் கூம்வூட் 21 மிகச் சிறந்ததெனக் காணப்பட்டது; பலாங்கொடைத் தொகுதியில் தேஆநி 2024 மிகச் சிறந்த முளைவகையெனக் காணப்பட்டது. சிறப்பற்ற மண்களில் தேஆநி 2043 என்னும் முளைவகையினது விளைச்சல் ஏமாற்றத்தையளித்தது. சென்ற் ஜோக்கிமில் செய்யப்பட்ட முளைவகைத் தெரிவுகள் நம்பிக்கையளிக்கத்தக்கவை. பலாங்கொடையிலுள்ள றைத் தோட்டத்தில் வறட்சி எதிர்க்கும் முளைவகைத் தெரிவொன்று முயற்சிக்கப்பட்டது. நிழல் மரங்களால் தேயிலையில் ஏற்படும் விளைவு பற்றி ஆராயும் பரிசோதனைகளில், நிழல் மரங்கள் அகற்றப்படுவதால் முதல் ஆறு மாதங்களில் விளைச்சல் குறைக்கப்படுவதாகவும், ஆனல் இதற்குப் பின்னர், நிழல் குறைக்கப்பட்ட அல்லது அகற்றப்பட்ட இடங்களில் விளைச்சல் கூடுவதாகவும் காணப்பட்டது. களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கிரமோக்சோன் உபயோகிக்கப்பட்ட இடங்களில் புல்லினங்கள் ஒரு பிரச்சனையாக இருந்தது. கிரமோக்சோன் விசிறலைத் தொடர்ந்து கூலியாட்களைக் கொண்டு புல்லினங்களை பிடுங்குவதற்குப் பதிலாக, ஏற்கனவே செய்யப்பட்ட கிரமோக்சோன் விசிறலுக்கு இரண்டு அல்லது மூன்று கிழமைகளுக்குப் பின்னர் மேலும் ஒரு விசிறல் செய்யப்படுவது உகந்தது எனக் காணப்பட்டது.

## தாவர இனப்பெருக்கவியல்

1961 ஆம் ஆண்டு தொடக்கம் நான்கு வெவ்வேறு குறிச்சிகளில் வருடாவருடம் ஆரம்பிக்கப்பட்டுவரும் முளைவகைப் பரிசோதனைகளில் தொடர்ந்து அவதானிப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. இதிலிருந்து அதிக தரவுகள் பெறப்பட்டுள்ளன. வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்ற முளைவகைகளைத் தெரிவுசெய்ய உதவும் பொதுத் தத்துவங்களை மதிப்பீடு செய்வதற்கு இத்தரவுகள் இப்போது ஆராயப்படவிருக்கின்றன. இப் பரிசோதனைகளையடுத்து, ஏற்கனவே கிடைத்த தரவுகளை வலியு

றுத்த அதிக பரிசோதனைகள் நடாத்தப்படும். அதிக விளைச்சலுக்குக் காரணமாயமையும் உள்ளியல்பான முளைவகையுருபுக்களைக் கண்டுபிடிப்பதிலும் தற்போது அதிக முயற்சிகள் கையாளப்பட்டு வருகின்றன. இவ்வகைப் பரிசோதனைகளிலிருந்து கிடைக்கும் தீர்மானங்களைக் கொண்டு சிறந்த முளைவகைகளை தெரிவுசெய்யவும், சிறப்பற்ற முளை வகைகளை விலக்கவும் தேவைப்படும் காலத்தை அதிகம் குறைக்க முடியும்.

## தாவர உடற்றொழிலியல்

மணலில் வளர்க்கப்படும் தேயிலைத் தாவரங்களில் நடாத்தப்படும் போசணைபற்றிய பரிசோதனைகளில் இவ் வருடம் மிகத் திருப்திகரமான முன்னேற்றம் செய்யப்பட்டது. பல முக்கிய போசணை மூலகங்களின் குறைவுநோய்கள் முற்றாகத் தூண்டப்பட்டு, இவை விவரமாக விளக்கப்பட்டுள்ளன. இதில் மேலும் பரிசோதனைகள் செய்வது சிறந்ததெனத் தெரிகின்றது.

நிலைக்குக்கொண்டுவரும் முறைகள், கொழுந்தெடுத்தல், கவ்வாத்துவெட்டல், உக்கின இலைகள் இடுத்தல், காற்றிலிருந்து பாதுகாப்பு அளித்தல் போன்ற வளர்ச்சிப் பகுப்புகளால் ஏற்படும் விளைவுகளைத் தீர்மானிப்பதற்கு கையாளப்படும் பரிசோதனைகளில் தொடர்ந்து படிப்படியான முன்னேற்றம் செய்யப்பட்டது. மண்ணிலுள்ள செயற்கை யுரத்துக்கும், கவ்வாத்து வெட்டிய பின்னர் உண்டாகும் திருப்தியற்ற வளர்ச்சிக்குமிடையே தொடர்புண்டு என்ற காரணத்தினால், இவ்வபாயத்தைக் குறைப்பற்கு தற்காலிக சிபாரிசுக்கள் செய்யப்பட்டுள்ளன.

## தாவர நோயியல்

மெதயில் புரோமைட்டு என்னும் இரசாயனப்பொருளை உபயோகித்து மண்ணை தூபமூட்டுதல் மூலம் போறியா என்னும் வேர் நோயை முற்றாகக் கட்டுப்படுத்தலாம் என இந் நிலையம் சிபாரிசு செய்ததைத் தொடர்ந்து, மலைப் பிரதேசத்திலுள்ள பல தோட்டங்கள், இப்போறியா நோயைக் கட்டுப்படுத்தும் திட்டத்தில் விரைவாக ஈடுபட்டுள்ளன. முன்னர் சிபாரிசு செய்யப்பட்ட கட்டுப்பாட்டு முறைகளில் கூடுதலான செலவு இருந்ததாலும், இத் தோட்டங்களில் இப் போறியா நோய் அதிக பிரச்சனையாக இருந்ததன் காரணமாகவும் இப் போறியா நோயைத் திருப்திகரமாகக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருந்த இத் தோட்டங்கள் இப்போது இவ்வாராய்ச்சியிலிருந்து வளரும் பலாபலன்களை ஏற்கனவே பெற்றுவருகின்றன. மெதயில் புரோமைட்டு போ. ஹிப்போலற்றெறிற்றியா என்னும் பங்கசுவைக் கட்டுப்படுத்தும் அதேயளவில் றொசெல்லினியா ஆற்குவாற்ரு என்னும் பங்கசுவையும் கட்டுப்படுத்துவதாகக் காணப்பட்டது. றொ. ஆற்குவாற்ரு பெரும் பிரச்சனையாக இருக்கும் ஊவா மாவட்டங்களிலுள்ள தோட்டங்களுக்கு இக் கண்டுபிடிப்பு மாபெரும் வெற்றியாகும்.

கொப்புள வெளிறல் என்னும் தொற்று நோயியல் பற்றி தொடர்ந்து படிப்பினைகள் செய்யப்பட்டன. இந் நோயின் அடிப்படைத் தோற்றங்கள் பற்றி அதிக செய்திகள் பெறப்பட்டுள்ளன. கொப்புளவெளிறல் நோய் விளைச்சலை எவ்வளவு குறைக்கின்றது என்பதைக் கண்டுபிடிக்க உதவும் பரிசோதனைத் திட்டம் சிறந்ததாகும். இப் பரிசோதனையின் பயனாக, உபயோகிக்கப்படும் பங்கசுகொல்லியின் அளவு குறைக்கப்பட்டு, உற்பத்திச் செலவும் வெளிநாட்டு நாணய மாற்றுச் செலவும் குறைக்கப்படுவதற்கான தற்போதய சிபாரிசுக்கள் செய்யப்பட்டன. இப் புது விசிறல் திட்டங்கள் முற்றாக நடைமுறைக்கு வரும்போது இத் தொழிற்துறை, ஒரு வருடம் 10 மில்லியன் ரூபாவுக்குமேல் இதில் மிச்சம்பிடிக்க முடியும்.

இளம் தேயிலையில் உண்டாகும் காறைப் புற்றுநோய், கிளைப்புற்று நோய் ஆகியன பற்றி மேலும் பல செய்திகள் பெறப்பட்டுள்ளன. இந் நோய் விருத்தியாவதற்கு நில ஈரப்பற்று நிலை முக்கியமானது எனக் காணப்பட்டது. இப் பங்கசுவில் அனேக குலவகைகள் இருப்பதாகக் காணப்பட்டிருப்பதனுல் எதிர்க்கும் முளைவகைகளைப் பயிர்செய்து இந் நோயைக் கட்டுப்படுத்த முடியுமென்பது அசாத்தியமாகும். ஏனெனில் ஒரு குலவகையை எதிர்க்கும் வல்லமையுடைய ஒரு முளைவகை வேறொரு குலவகையினுல் தாக்கப்படக்கூடியதாக இருக்கலாம். எனினும், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தாக்கப்படக்கூடிய எந்தவொரு முளைவகையும் பயிர்செய்யப்படக்கூடாது என இந் நிலையம் ஆலோசனை செய்துள்ளது.

நெமற்ரேடியல்

மண்மாதிரிகள் எடுக்கப்படும் ஆழம், பிரற்றிலெங்குஸ் லூசிக் குடித்தொகைகளின் பரம்பல் ஆகியவற்றுக்கிடையுள்ள தொடர்புபற்றி ஆராயப்பட்டதில், வெவ்வேறு ஆழங்களில் இவற்றின் குடித்தொகையடர்த்தி மிக வித்தியாசப்படுமளவில் இருந்ததாகக் காணப்பட்டது. முதல் ஆறு அங்குல வலயத்தில் மிகக் கூடிய குடித்தொகையும், இதைத் தொடர்ந்து முறையே இரண்டாவது, மூன்ருவது ஆறு-அங்குல வலயங்களில் இவை இருப்பதாகவும் காணப்பட்டது. வருடத்தின் வெவ்வேறு காலங்களிலும் மிகக் குறிப்பிடத்தக்களவில் வேறுபடும் குடித்தொகையளவுகள் காணப்பட்டன. எனினும், இவ்வாண்டு முழுவதும் இவற்றின் நிலைக்குத்துப் பரம்பல் விகிதம் ஏறத்தாழ ஒரேமாதிரியாகவிருந்தது.

*1966–1967* ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சகிப்புச் சோதனையிலிருந்து கிடைத்த முடிவுகள், பி. லூசி என்னும் வேர்விரண நெமற்ரேட் புழுவைச் சகிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட முற்பத்திரண்டு இரு முளைவகைக் கலப்பினப்பிறப்புக்களில் ஐந்து, எதிர்க்கும் வல்லமையுடைய டிரி 95 என்னும் முளைவகைக்குச் சரிசமமான, எதிர்ப்பு வல்லமையுடையனவாக இருப்பதைத் தெரிவித்தன. இக் கலப்பினப்பிறப்புக்களில் நான்கு, தேஆநி 2024 × டிரி 1 ஆகியவற்றினதும், ஏனையது தேஆநி 1114 × டிரி 95 ஆகியவற்றினதும் வமிசமாகும்.

தேயிலையை வேரோடுபிடுங்க உபயோகிகப்படும் இரு முறைகளில், மறுசீரமைப்பின்போதும், தேயிலை திரும்ப பயிர்செய்யப்பட்ட பின்னரும் இழைப்புழுக்களின் எண்ணிக்கைகளில் ஏற்படும் விளைவை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட பரிசோதனைகள் இன்னும் முற்றுப் பெறவில்லை. இளம் தேயிலை வேர்களில் தோன்றும் இழைப்புழுக்களின் ஆக்க வீதம், கையால் பிடுங்கப்பட்ட பாத்திகளில் மிகக் கூடுதலாகவும், இயந்திரத்தால் பிடுங்கப்பட்ட பாத்திகளில் குறைவாகவும் இருப்பதாக இதுவரை பெறப்பட்ட முடிவுகள் காண்பித்துள்ளன. இழைப்புழு பரவியிருக்கும் இடங்களில் முதிர்ந்த தேயிலையை இயந்திரத்தால் பிடுங்குவது நல்லதல்ல எனவும், இயந்திரத்தால் பிடுங்குவதைத் தொடர்ந்து இவ்விடத்தில் நிலங்கிண்டியால் ஆழக் கிண்டியும், குழிகள் தோண்டியும் ஏராளமான வேர் அகற்றப்படல் வேண்டும் எனவும் இப் பரிசோதனை முடிவுகள் காண்பித்தன.

பயிர்செய்வதற்குமுன் மண்ணில் நடாத்தப்பட்ட பரிசோதனைகளில் கிடைத்த முடிவுகள், வெளிமண்டலளவில் இழைப்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு மெதயில் புரோமைட்டு என்னும் இரசாயனப் பொருள், அதாவது இது மிகக் குறைந்தளவில் இடப்பட்டபோதும் (100 சது. அடிக்கு ½ இரு. வீதம்), மிகச் சிறந்த மண் தூபமூட்டி என்பதைத் தெரிவித்தன. மெதயில் புரோமைட்டுடன் ஒப்பிடும் போது டபிள்யு என் – 12 (WN –12) என்னும் புதுத் தூபமூட்டி சற்று குறைந்த பயன்விளைவிக்கத்தக்கதாக இருந்தபோதும் இது, ஒரு ஏக்கருக்கு 10 கலன்கள் வீதம் உபயோகிக்கப்பட்டபோதும் (ஒரு ஏக்கருக்கு 40 கலன்கள் வரை உபயோகிக்கப்படும் டிடி யுடன் ஒப்பிடும் போது) டிடி யை விடச் சிறந்ததாகக் காணப்பட்டது.

நாற்றுமேடை மண்களிலுள்ள இழைப்புழுக்களைக் கட்டுப்படுத்த இம் மண்கள் மெதயில் புரோமைட்டினுல் தூபமூட்டப்படல் வேண்டும் என ஆலோசனை கூறப்பட்டுள்ளது. நாற்றுமேடை மண்களுக்கு சிபாரிசு செய்யப்பட்ட விகிதம் 100 சது. அடிக்கு 2 இருத்தலாகவே இன்னும் இருக்கின்றது.

முதிர்ந்த தேயிலையுள்ள இடங்களில் நடாத்தப்படும் மண் தூபமூட்டற் பரிசோதனைகளில் கிடைத்த முடிவுகள், இச் செயற்பாட்டைத் தொடர்ந்து விளைச்சல் குறிப்பிடத்தக்களவு கூடுவதில்லை என்பதைத் தெரிவித்தன. இத் தூபமூட்டல் செய்யப்பட்ட சில மாதங்களில் இவ் விழைப்புழுக்களின் குடித்தொகைகள் ஆரம்பத்திலிருந்த அளவுக்கு பெருகுவதாகக் காணப்பட்டது. முதிர்ந்த தேயிலைக்கு டிடி நச்சுத் தன்மையற்றதாக இருந்தபோதும், டபிள்யு என்–12 (WN–12) என்னும் புதுத் தூபமூட்டி சற்று நச்சுத்தன்மையுடையது என்பதை இம் முடிவுகள் மேலும் காண்பித்தன.

மத்தியபிரதேச மாவட்டங்களில் நன்கு வளர்ச்சியுறத் தவறும் இளம் தேயிலை காணப்படும் இடங்களில் ரூடோபோலுஸ் சிமிலிஸ் என்னும், முற்றிலும் வேறுபட்ட ஒரு புது நெமற்ரூட் இனம் அதிகளவில் இருப்பதாகக் காணப்பட்டது. இதன் சேதத்தால் உண்டாகும் அறிகுறிகள், பி. லூசி என்பதனுல் உண்டாகும் அறிகுறிகளைப் போன்றனவே. இந் நெமற்ரூடினது பரம்பல் பற்றி தீவிரமான கணிப்பொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. நோய்விளைவிக்கு மியல்புபற்றிய பரிசோதனைகள் ஏற்கனவே சென்ற் கூம்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சிற்றுயிரியல்

26 பூச்சிகொல்லிகள், இரண்டு பங்கசுகொல்லிகள், இரண்டு பூச்சிநோய்விளைவிகள் முதலியன உபயோகித்து செய்யப்பட்ட பரிசோதனைகளில், வெடி–துளை துளைப்பி வண்டை ஹெப்ருகுளோர் மட்டுமே திருப்திகரமாகக் கட்டுப்படுத்துகிறது என காணப்பட்டது. இவ் வண்டைக் கட்டுப்படுத்த ஹெப்ருகுளோர், டியெல்றினைப் போல் சிறந்தது எனவும், அல்றினைவிட மேம்பட்டது எனவும் காணப்பட்டது. ஹெப்ருகுளோரை உபயோகித்து வெடி–துளை துளைப்பி வண்டைக் கட்டுப்படுத்தக்கூடிய கால எல்லை 15 மாதங்களாகும். பக்கவிளைவைப் பொறுத்த வரையில், அல்றின், டியெல்றின் ஆகியவற்ருேடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஹெப்ருகுளோர் விசிறுவதால் மிகக் குறைவான தோற்றிக்ச் புழுக்களே தோன்றுவதாகக் காணப்பட்டது. தோற்றிக்ச் புழுக்கள் மிகக் குறைவாகக் காணப்பட்டபோதும், டியெல்றின் உபயோகிக்கப்படும்போது தோற்றிக்ச் புழுக்களைக் கட்டுப்படுத்தத் தேவைப்படும் டிடிரி விசிறல், ஹெப்ரூகுளோர் உபயோகிக்கப்படும்போது தேவைப்படுவதில்லை. சேதனவுறுப்புப் பொசுபொரசு, காபமேற்று ஆகிய தொகுதிகளுக்குரித்தான பூச்சிகொல்லிகள் வெடிதுளை துளைப்பி வண்டைக் கட்டுப்படுத்த உகந்தவையல்ல எனக் காணப்பட்டது. பெனித்திரோத்தியோன் (சுமித்தியோன், பொலித்தியோன்) பெந்தியோன் (லெபேசிட்) ஆகியன, ஒருமுறை விசிறப்படுவதன் மூலம், சுமார் இரண்டு மாத கால எல்லைக்குள் இத் துளைப்பிவண்டைக் கட்டுப்படுத்தின; ஆனுல் இது பொருளாதார முறையில் பயனுள்ளதல்ல. இப் பரிசோதனை முடிவுகளை ஆதாரமாகக்கொண்டு, வெடிதுளை துளைப்பி வண்டை ஹெப்ருகுளோர் கொண்டு கட்டுப்படுத்த வேண்டுமென, டிசெம்பர் மாதம் எல்லாத் தோட்டங்களுக்கும் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டது.

இப்புது சிபாரிசுக்கள், மிகக் குறைந்த பக்கவிளைவுகளுடன், துளைப்பி வண்டை திருப்திகரமாகக் கட்டுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. டியெல்றின் விசிறப்படுவதால் ஏற்படும் பக்கவிளைவுப் பிரச்சனைகள் இவ்வருடம், முற்ருகத் தீர்க்கப்பட்டது. 1967 ம் ஆண்டு முடிவில் எதுவித மயிர்கொட்டிகளும் வெளித்தோன்றியதாக இந் நிலையத்துக்கு அறிவிக்கப்படவில்லை.

கண்டியிலுள்ள மத்தியபிரதேச நிலையத்தில், நிக்கல் குளோரைட்டு 23 சதவிகித வெடிதுளைதுளைப்பிவண்டுக் கட்டுப்பாட்டைத் தந்ததாகக் காணப்பட்டது. அத்துடன், வெடிதுளை துளைப்பி வண்டை எதிர்க்கும் முளைவகைகளைத் தெரிவதிலும் இந் நிலையத்தில் தொடர்ந்து பரிசோதனைகள் செய்யப்பட்டன. இதில், பல முளைவகைகள் வெளிமண்டலப் பரிசோதனைகளில் நம்பிக்கையளித்தன.

அக்கரிட்டுக் கொல்லிகள் உபயோகித்து சிற்றுண்ணிகளைக் கட்டுப்படுத்தும் பரிசோதனைகளில், ஒரு ஏக்கருக்கு 10 பா. அ. (முன்னர் 15பா. அ.) கெல்தேன் அல்லது 10 பா. அ. (முன்னர் 30 பா. அ.) தெடியோன் வி 18 என்பன உபயோகித்து சென்னிற சிற்றுண்ணி, சிவப்புச் சிலந்திச் சிற்றுண்ணி ஆகிய இரண்டையும் திருப்திகரமாக கட்டுப்படுத்த முடியுமெனக் காணப்பட்டது. இவ்விரு அக்கரிட்டுக்கொல்லிகளில் கெல்தேன் மேம்பட்டதெனவும் காணப்பட்டது. ஒரு ஏக்கருக்கு செலவிடப்படும் கெல்தேனின் செலவை 33 சதவிகிதத்தாலும், ஒரு ஏக்கருக்கு செலவிடப்படும் தெடியோனின் செலவை 200 சதவிகிதத்தாலும் குறைக்க இப் புதுக் கண்டுபிடிப்புகள் உதவும். ஏராளமான புது அக்கரிட்டுக்கொல்லிகள் இவ்வருடம் பரீட்சிக்கப்பட்டன. இதில், பினுபக்கிறில் (அக்கிறிசிட்), மொறெஸ்ருன் ஆகியவை, இவற்றில் மேலும் பரிசோதனைகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர், எதிர்காலத்தில் இச் சிற்றுண்ணிகளைக் கட்டுப்படுத்தவுதவலாம் எனக் காணப்பட்டது. இச் சிற்றுண்ணிக் கட்டுப்பாட்டின் பயனுல் ஏற்படும் பொருளாதார நலன் பற்றி ஆராயப்பட்டதில், நடுத்தரளவில் காணப்படும் சிலந்திச் சிற்றுண்ணி, சென்னிறச் சிற்றுண்ணிகளைக் கட்டுப்படுத்துவதால், ஒரு வருடம், ஏக்கருக்கு சுமார் 75 இரு. செய் தேயிலை கூடுதலாகப் பெறப்பட முடியும் எனக் காணப்பட்டது. எனவே இச் சிற்றுண்ணிகளைக் கட்டுப்படுத்துவது பொருளாதார முறைப்படி பயனுள்ளதாகும் என்பதற்கு தெளிவான சான்றுள. உண்மையில், இதைக் கட்டுப்படுத்த ஒரு வருடம், ஏக்கருக்கு 27 ரூபா மட்டுமே செலவாகின்றது என மதிப்பிடப்பட்டுள்ளது.

## உயிரினவிரசாயனம்

கீழ்ப்பிரதேசத் தேயிலையின் தரத்தைக் கூட்டுவதும் (தொழின் முறையியற் பிரிவுடன் சேர்ந்து), குளிர்ந்த நீரில் கரையும் உடன் தேநீர் தயாரிப்பதும் இப் பிரிவின் முக்கிய நோக்கங்களாகும். முன்னயதைப் பெறுவதற்கான செய்முறை தற்காலிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பின்னயதற்கான பரிசோதனைகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உலர்ந்த, கரும் தேயிலைகளின் பகுப்பு தொடர்ந்து செய்யப்பட்டது. சேமிப்பதால் கரும் தேயிலையிலுள்ள பிரதான இரசாயனக் கூறுகளில் ஏற்படும் விளைவுகள் பற்றியும் ஆராயப்பட்டது. தேயிலையில் இருக்கும், மூன்று நொதியங்களின் (பல்பீனோலொக்சிடேசு, ருன்சமினேசு, பொசுபேற்றேசு) இயல்புகள் பற்றி ஆராயப்பட்டது. இலையில், பல்பீனோலொக்சிடேசு இருக்குமிடம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்று, ரோக்கியோவில் நடைபெற்ற 7 வது உயிரினவிரசாயன சருவதேச காங்கிரஸ் மாநாட்டில் வாசிக்கப்பட்டது. கதிர்த்தொழிற்பாட்டுச் சுவட்டு தொழினுட்பத்தை உபயோகித்து, அமினோவமிலம், தியனின், ஆகியன தேயிலைத் தாவரங்களின் வேர்களில் தொகுக்கப்பட்டு இங்கிருந்து துளிரிலைக்குக் கடத்தப்படுகின்றன என்பது உறுதிப்படுத்தப்பட்டது. சென்ற் கூம்ஸ், ஊவா ஆகிய இடங்களில் வளரும் தேயிலைத் துளிர்களிலுள்ள துணைநொதியம், மங்கனீசு என்பனவற்றின் பருவகால வேறுபாடுகள் பற்றிய ஆராய்ச்சிகளில், இவ் விரசாயானக் கூறுகளின் அளவுகளுக்கும் தேயிலையின் வாசனை விருத்திக்குமிடையே தொடர்பு இருக்கலாமெனக் காணப்பட்டது. கற்றெக்கின்களுக்கான ஒரு புது சிவிறற் சோதனைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தேயிலைத்துளிரில் இருக்கும் நுண்டாவரவினம் பற்றிய நுண்ணுயிரினவியற்

ஆராய்ச்சியில், காலநிலைச் சூழ்நிலை வேறுபாடுகள் இந்நுண்ணுயிர்க் குடித்தொகையின் பண்பையும், தொகையையும் பாதிப்பதாகக் காணப்பட்டது.

## தேயிலைத் தொழின்முறையியல்

கீழ்ப்பிரதேசத்தில் செய்யப்பட்ட வேலையில், முக்கியமாக ரூே ரோவேன்–சிரிசி தேயிலைகளை வர்த்தக ரீதியில் தயாரிப்பதிலும், கலாநிதி ஆர். எல். விக்கிரமசிங்காவுடன் சேர்ந்து, கீழ்ப்பிரதேசத் தேயிலையின் தரத்தைக் கூட்டுவதிலும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. முன்னயதைப் பொறுத்தவரையில், முதலாவது வர்த்தக–அளவிலான ரூேரோவேன்–சிரிசி தேயிலைகள் இப்போது சென்ற் ஜோக்கிமில் தயாரிக்கப்படடுள்ளன. இவற்றின் சந்தை விலையை இப்போது நாம் எதிர்பார்த்துள்ளோம். முக்கியமாக பைக்கற்படுத்தும் சிறப்பியல்புகளைப் பொறுத்தவரையில், சிறுமணியான அல்லது ஓரளவு விரிந்தவகையான இலையா விரும்பத்தக்கது என்பதில் கொழும்பு வியாபார வட்டாரங்கள் அவர்களின் கருத்தில் வேறுபடுவதாகத் தெரிகின்றது.

கீழ்ப்பிரதேசத்தில் உபயோகிக்கப்பட்ட ஜோர்ச் வில்லியம்சன், (ஆபிரிக்கா) ரூெல்லி நொதிப்பு முறை, மேசை–நொதிப்புச் செய்து பெற்ற பி.ஓ.பி., பி.ஓ.பி.எவ். தரத் தேயிலைகளின் விலை மதிப்பைவிடக் குறிப்பிடத்தக்களவு கூடுதலான விலைமதிப்பைத் தரவில்லை.

மத்தியபிரதேச நிலையத்தில் நடாத்தப்பட்ட பரிசோதனைகள் தே–நீரியல்பைப் பொறுத்தவரையில் இம் மாவட்டத்துக்கு எம்பி–ஏ1 என்னும் முளைவகை சிறந்தது எனத் தெரிவித்தன. மத்தியபிரதேசத்தில், ஹெப்ரூகுளோர் என்னும் பூச்சிகொல்லி, இது சாதாரணமாக உபயோகிக்கப்படும் நிலைமைகளின்கீழ் தேயிலையில் 'மாசு மணத்தை,' ஏற்படுத்துவதில்லை எனவும் காணப்பட்டது.

தொழின்முறைப் பிரிவு, ஐக்கிய ராச்ஜியத்திலிருக்கும் தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தித் தாபனத்துடன் சேர்ந்து 'பாய்பொருட் படை' தேயிலை உலர்த்தியை அபிவிருத்திசெய்வதிலும் ஈடுபட்டுள்ளது. சென்ற் கூம்சில் 'திரித்துறேற்றர்' உபயோகித்து பரிசோதனைகள் செய்யப்படுவது குறிப்பிடப்படவேண்டிய மற்றய காரியங்களில் ஒன்ருகும். பி.ஓ.பி., பி.ஓ.பி.எவ். ஆகிய இரு தேயிலைத் தரங்களினதும் தேநீரியல்பு, தோற்றம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், ரூேரோவேன் தயாரிப்பு முறையில் உற்பத்தியாகும் தேயிலையை ஒக்கும் தேயிலை வகையையே இவ்வியந்திரம் உற்பத்திசெய்கின்றதுயென இதில் காணப்பட்டது. இவ்வியந்திரத்தை எளிதாக்கி இதன் இயங்குமுறையை சிறப்பிப்பதற்காக இது இப்போது திருத்தியமைக்கப்படுகின்றது.

## புள்ளிவிவரவியல்

வெளிமண்டலம், தொழிற்சாலை, பரிசோதனைச்சாலை ஆகிய இடங்களில் நடைபெறும் பரிசோதனைகளின் வடிவ அமைப்பு, பகுப்பு, புள்ளி விவர விளக்கங்கள் பற்றிய வேலைகளே இவ்வருடம் முழுவதும் நடைபெற்றது. எல்லாமாக 240 பரிசோதனைகள் பகுக்கப்பட்டன. விரிவுப் பரிசோதனைகளிலிருந்து தரவுகள் வர ஆரம்பித்துள்ளன. இவற்றில், ஒரு தொகுதியிலிருக்கும் பாத்திகளுக்கிடையே அதிக மாறல்கள் இருந்தமையால், இத்தரவுகள் இணைமாறல் பகுப்புகள் மூலம் ஆராயப்பட்டன. இருபது இவ்வகைப் பரிசோதனைகள் பகுக்கப்பட்டுள்ளன. பல்வேறு வகையான வடிவமைப்புகளின் சரிதுட்பத் திறன்களும், மாறற் குணகங்களும் செய்யப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

## ஆலோசனை வேலை

### நோய்விளைவிகளும் நோய்களும்

வெடிதுளை துளைப்பி வண்டைக் கட்டுப்படுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட டியெல்றின் இப்போது விலக்கப்பட்டதனால், பக்கவிளைவாகத் தோன்றும் தோற்றிக்ச் புழு, காம்பு மயிர்கொட்டி, சுருக்கசைவு மயிர்கொட்டி ஆகியன 1967 ஆம் ஆண்டில் மிகக் குறைந்தன. சில குறிப்பிட்ட இடங்களைத் தவிர, இந் நோய்விளைவிகள், வறட்சியான மாதங்களில் கூட, ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை.

வெடிதுளை துளைப்பி வண்டைக் கட்டுப்படுத்த, டியெல்றின், அல்றின் ஆகியவற்றுக்குப் பதிலாக ஹெப்ருகுளோர் உபயோகிக்கப்படல் வேண்டுமென தற்போது சிபாரிசுக்கள் செய்யப்பட்டுள்ளன. நாற்று மேடைகளில் நெமற்ரூட் புழுக்களைக் கட்டுப்படுத்த மெதயில் புரோமைட்டு தூபமூட்டியாக உபயோகிக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனையை அனேக தோட்டங்கள் பின்பற்றிவருகின்றன. சில தோட்டங்கள், கொப்புள வெளிறல் நோயைக் கட்டுப்படுத்த செம்பு விசிறல்களுக்குப் பதிலாக நிக்கல் குளோரைட்டை உபயோகித்துப் பார்த்தன.

### செயற்கையுரங்கள்

பொருளாதார நலனைக் கருதி, பொற்ருசு, பொசுபேற்று ஆகியவற்றின் அளவுகள் இவ்வருடம் மேலும் குறைக்கப்பட்டன. சில இடங்களில், இவை தோட்ட செயற்கையுரத் திட்டங்களிலிருந்து முற்ருக விலக்கப்பட்டுள்ளன.

### விரிவுப் பரிசோதனைகள்

நுவரெலியா, ஊவா ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படும் அனேக பரிசோதனைகளில், 1967 ஆம் ஆண்டின் பின் ஆறுமாத காலங்களில், செயற்பாட்டுக்குப் பின்னுன கொழுந்தெடுப்பு ஒருவருடப் பூர்த்தியடைகின்றது. முடிவுகள் புள்ளிவிவரமுறைப்படி பகுக்கப்படுகின்றன. பொசுபேற்று, பொற்ருசு ஆகியவற்றின் வெவ்வேறு அளவுகளுக்கு விளைச்சலில் வித்தியாசமிருந்ததாக இதுவரை காணப்படவில்லை. யூரியா, அமோனியம் சல்பேற்று, கல்சியம் அமோனியம் நைத்திரேற்று ஆகிய நைதரச செயற்கையுரங்களுக்கிடையே விளைச்சலில் வித்தியாசம் இல்லையெனவும் காணப்பட்டது.

### விரிவுத் தொழிற்பாடுகள்

இதில் பிரதானமாக, இலங்கைத் தேயிலைக் கைத்தொழிலின் நூற்ருண்டு விழாவையொட்டி, இந் நிலையத்தின் 14 வது மாநாட்டிலும், கொழும்பில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சியிலுமே அதிக கவனம் செலுத்தப்பட்டது.

### அக்கிறந்தனை உபநிலையம்

இந்த உபநிலையத்தில் வேலை தொடர்ந்து செய்யப்பட்டது. இங்கு, மேலும் 20 ஏக்கர் தேயிலை வேரோடுபிடுங்கப்பட்டு, இவ்விடத்தில் கௌதமாலாப் புல்லு பயிரிடப்பட்டுள்ளது. இப்போது மொத்தமாக 40 ஏக்கர் நிலத்தில் இப் புல்லுண்டு. ஐந்து ஏக்கர் புதர் நிலத்தில், வடகிழக்குப் பருவக்காற்றுக் காலத்தின்போது, 30 முளை வகைகள் ஆறு எழுந்தபடியான தொகுதிகளில் பயிரிடப்பட்டுள்ளன.

## நூல்நிலையமும் வெளியீடுகளும்

கலாநிதி ஆர். எல். டி சில்வா அவர்கள் இந் நிலைய வெளியீடுகளின் துணைப் பதிப்பாசிரியராக தொடர்ந்து கடமையாற்றினர். இவர் இந் நூல்நிலையத்தின் பரிபாலன வேலையையும் தொடர்ந்து கவனித்தார்.

### நூல்நிலையம்

விலைக்கும், நாணயமாற்று மூலமும் பெறப்படும் பத்திரிகைகளின் மொத்த எண்ணிக்கை 239 ஆகும். நூல்நிலையத்துக்கு சேர்க்கப்பட்டுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 149 ஆகும். இந் நிலையத்தின் வெளியீடுகள் இலவசமாக வழங்கப்படும் பட்டியலில் இவ்வருடம் மேலும் 67 சேர்க்கப்பட்டிருப்பதால், இப்போது இதன் மொத்தம் 2884 ஆகும்.

ஜூன்–ஜூலை மாதங்களில் இந் நூல்நிலையம், அதிபரின் அலுவலகத்துக்கு அருகேயிருக்கும் புதுக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. இலங்கைத் தேயிலையின் நூற்ருண்டுவிழா ஞாபகார்த்தமாக தேயிலை ஆராய்ச்சி நிலையத்திஞல் பல விசேட வெளியீடுகள் வெளியிடப்பட்டதஞல், இவ்வெளியீடுகளை பங்கீடு செய்வதற்கு இந் நூல்நிலையப் பணியாளர் மேலதிகமாக அதிக வேலை செய்யவேண்டியிருந்தது. இவர்களின் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்ருேம்.

### வெளியீடுகள்

இந் நிலையத்தின் வெளியீடுகளை வெளியிடுவதற்கான நாளாந்த வேலை இப்போது மிகவும் அதிகரித்துள்ளது. தே. ஆ. நிலையத்தின் வருடாந்த அறிக்கையின் 1—ம், 2—ம் பாகங்கள் இப்போது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளிலும் பருவப் பத்திரங்களாக வெளியிடப்படுவதே இதற்குக் காரணமாகும். இவ் வழக்கம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

திரு. சி. பி. பொஸ்ரர்–பாஹம் அவர்கள் ஜூலை மாதம் இந் நிலைய சேவையிலிருந்து விலகியதிலிருந்து, வெளிமண்டல செய்முறைகள் பற்றிய தே. ஆ. நி. ஆலோசனைத் துண்டுவெளியீடுகளை வெளியீடு செய்யும் தொழிலை கலாநிதி ஆர். எல். டி சில்வா அவர்கள் ஏற்றுள்ளார். விலகுங்காலம் வரை இரண்டு சிற்றிதழ்கள் அச்சிடப்பட்டன; வருட முடிவில் மேலும் மூன்று சிற்றிதழ்கள் அச்சிடப்பட்டன.

திரு. ஜே. இ. கிரனம் அவர்கள் எழுதிய ''இலங்கைத் தேயிலையிலுள்ள பூச்சி, சிற்றுண்ணி நோய்களும் அவற்றைக் கட்டுப்படுத்தலும்'' என்னும் தலைப்புத் தாங்கிய தனிக்கட்டுரை நூல் நம். 6, ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது. இந் நூலில் வெளியிடப்பட்ட 41 சிறந்த நிற ஒளிப்படத் தாள்களைச் செய்துதருவதில் ஒத்துழைத்தும், நிதியுதவி தந்தும் உதவிய 'இலங்கை செல் கொம்பனி லிமிடெட்,' 'செல் தேசிய பெற்ருேலியம் கொ. லிமிடெட்' ஆகியவற்றுக்கு இந் நிலையம் நன்றி தெரிவித்துக்கொள்கின்றது.

இலங்கைத் தேயிலையின் நூற்ருண்டுவிழாவையொட்டி தே. ஆ. நிலையம் மூன்று விசேட வெளியீடுகள் வெளியிட்டுள்ளது. இவற்றில் இரண்டு, விசேட 'தேயிலை காலாண்டுச் செய்தி' வெளியீடுகளாகும். முன்னய அல்லது தற்போதுள்ள உத்தியோகத்தர்களால் எழுதப்பட்ட மதிப்புரைக் கட்டுரைகளைக் கொண்ட 165 பக்க வெளியீடு ஒன்று ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது. முறையே இந் நிலையத்தின் முதல், கமத்தொழில் இரசாயனவறிஞகவும், தாவர உடற்ருெழிலறிஞகவும் தொழில்புரிந்த கலாநிதி ரி. ஈடின், கலாநிதி எப். ஆர். ரப்ச் ஆகியோரிடமிருந்தும், திரு. டி. எம். போறஸ்ற் அவர்களிடமிருந்தும் பெறப்பட்ட கட்டுரைகளுக்கு நாம் நன்றிதெரிவித்துக்கொள்கிருேம்.

செப்டம்பர் மாத 'தேயிலை காலாண்டுச் செய்தி' இதழ் தே. ஆ. நிலையத்தின் தேயிலை நூற்றாண்டுவிழா மாநாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்காக உபயோகிக்கப்பட்டது. இவ் வெளியீட்டில் தரப்பட்டுள்ள அனேக கட்டுரைகள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் பற்றிய அறிக்கைகளாகும். 'தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் வழிகாட்டி' என்னும் தலைப்புத் தாங்கிய விரிவான வெளியீடு ஒன்று இவ்வருடம் எழுதப்பட்டு, தேயிலை நூற்றாண்டுவிழா மாநாட்டுக் கிழமையின்போது வெளியிடப்பட்டது. 'தேயிலை காலாண்டுச் செய்தி' யின் 38 வது இதழ், கடந்த நாற்பது ஆண்டுகளில் வெளியான மிகப் பெரிய இதழாக அமைகின்றது.

தே. ஆ. நிலைய ஒளிப்படம்பிடிப்பாளர் திரு. டி. ஜே. எம். ஹெற்றியாராச்சி அவர்களினதும், அவரின் உதவியாளர் திரு. டி. எல். கூஞ்சி அவர்களினதும் ஒத்துழைப்பையும், விடாமுயற்சியையும் இங்கு குறிப்பிடுவது விரும்பத்தக்கது. இவ் வருடம் இந் நிலையத்தின் வெளியீடுகள் வெற்றிகரமானதாக அமைய இவர்களின் உதவி மிக இன்றியமையாதவிருந்தது.

## தோட்டங்கள்

சென்ற் கூம்ஸ், சென்ற் ஜோக்கிம் ஆகிய இரு தோட்டங்களும் மே மாதத்தில் தேயிலை நூற்றாண்டுவிழாக் கிழமையின்போது பார்வையாளர்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இவ்வாண்டில் இவ்விரு தோட்டங்களினதும் தேயிலைகள் நல்ல விலையைப் பெற்றன. அதிக விலைபெற்ற கீழ்ப்பிரதேசத் தேயிலைகளில் சென்ற் ஜோக்கிம் தேயிலை ஒன்றாகும். இரு தோட்டங்களிலும், வேலை நிறுத்தங்கள் அல்லது தொழிலாளர் கரைச்சல்கள் எதுவும் இல்லாது வேலைகள் செவ்வனே நடைபெற்றன. இதன் பயனாக பரிசோதனைத் திட்டங்கள் திருப்திகரமாகச் செய்யப்பட்டன.

## நன்றி நவிலல்

எமது நிலையப் பரிசோதனைத் திட்டங்களை செவ்வனே செய்ய அயராது ஒத்துழைத்து உதவிய இலங்கைத் தோட்டத்துரைமார்கள் சங்கம், இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கம், முகவர்த்தாபனச் சபைகள், எல்லாத் தோட்டங்களினதும் தோட்டத்துரைமார்கள், உதவி தோட்டத்துரைமார்கள் ஆகியோருக்கு நிலையத்தின் சார்பாக நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.